மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
O.S.NO. 107 /2013

12.10.2018

குறுக்கு விசாரணை

PW – காளியம்மாள் க/பெ. பழனிச்சாமி

நான் ஒன்டி புதூரில் 20 வருடங்களாக இருக்கிறேன் அதற்கு முன்பும் அங்கே தான் இருந்தேன்,. எனக்கு திருமணம் ஆகி 60 வருடங்கள் இருக்கும். திருமணமானதில் இருந்தே ஒண்டிப்புதூரில் இருந்து வருகிறேன். எனது வீட்டுக்காரர் பழனிச்சாமி கவுண்டர் மில்லுக்கு போய் கொண்டிருந்தார். அவர் இறக்கும்வரை மில்லுக்குதான் போய் கொண்டிருந்தார். என் சகோதரி மசாத்தாளின் கணவர் டிரைவராக இருந்தார். என் மகள் மற்றும் மகன் மில்லுக்கு தான் போய் கொண்டிருந்தனர். அந்த மில்லில் வேலை செய்த வருமானத்தை வைத்து தான் நாங்கள் குடும்ப செலவுகளை பார்த்து கொண்டிருந்தோம். என் அப்பா பெயர் பெ.மாரப்ப கவுண்டர். அவரை பெ.மாரப்ப கவுண்டர் என்று சொன்னால் தான் ஊருக்குள் எல்லோருக்கும் தெரியும் என்று சொன்னால் சரிதான். பெ.மாரப்ப கவுண்டர் அவரது அண்ணன் தம்பிகள் 1955, 56 ஆண்டுகளிலேயே பாகக்கறார் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். பாகக்கறார் பத்திரத்திலும் பெ.மாரப்ப கவுண்டர் என்று உள்ளது என்றால் சரிதான். மாரப்ப கவுண்டரின் மனைவி அதாவது என் தாயார் மாரப்ப கவுண்டர் இறக்கும் முன்பே இறந்து விட்டார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு தொழில் விவசாயம் என்றால் சரிதான். என் அப்பா பிறந்தது , வளர்ந்தது தொழில் செய்தது, இறந்தது எல்லாம் வேலாயுதம்பாளையம் தான் என்றால் பிறந்தது , வளர்ந்தது தொழில் செய்தது எல்லாம் வேலாயுதம்பாளையம், இறந்தது ஒண்டிப்புதூர். நான் மாரப்ப கவுண்டர் மகள் என்பதை காண்பிக்கும் என்னுடைய பிறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைக்கவில்லை. என்னுடைய சகோதரி மசாத்தாளின் பிறப்பு சான்றிதழையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய சகோதரி மசாத்தாள் மற்றும் என்னுடைய திருமண பத்திரிக்கைகளையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்திருக்கிறோமா என்றால் பத்திரிக்கை அச்சடிக்கவில்லை. நானும் என்னுடைய சகோதரி மசாத்தாளும் பெ.மாரப்ப கவுண்டரின் வாரிசுகள் என்பதை காண்பிக்கக்கூடிய எந்த ஒரு ஆவணத்தையும்

Sd/-காளியம்மாள்

நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் தான் வாரிசுகள். பெ.மாரப்ப கவுண்டர் எந்த வருடம், எந்த மாதம் எந்த தேதியில் ஒண்டிப்புதூருக்கு வந்தார் என்பதை காண்பிக்கும் ஆவணங்கள் ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை. இறப்பு சான்றிதழில் பெ.மாரப்பகவுண்டரின் தகப்பனார் பெயர் பொங்கியா கவுண்டர் என்று உள்ளது என்றால் ஆமாம். பெ.மாரப்ப கவுண்டர் இறந்ததை நானோ, எனது சகோதரியோ, எங்களுடைய வாரிசுகளோ அவர் இறந்த 30 நாட்களுக்குள் இறப்பு தகவல் சொன்னோமா என்றால் என் வாரிசுகள் போய் சொன்னார்கள். ஒண்டிப்புதூரில் பஞ்சாயத்திற்கு போய் சொல்லி அவர்கள் கொடுத்த இறப்பு சான்றிதழ் என்னிடம் உள்ளது. என் பையன்கள் தான் போய் சொன்னார்கள். என் தகப்பனார் என்று சொல்லும் பெ.மாரப்ப கவுண்டர் இறந்த 30 நாட்களில் ஒண்டிப்புதூர் பஞ்சாயத்தில் சொல்லி அவர்கள் கொடுத்த இறப்பு சான்றிதழ் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆன மாரப்பகவுண்டரின் இறப்பு சான்றிதழ் சரியானதுதான். மாரப்பகவுண்டர் 1998 ல் இறந்ததற்கு 8 வருடங்கள் கழித்து தான் இறப்பு சான்றிதழ் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அப்போதே போய் சொல்லி விட்டோம். சாமளாபுரம் கிராமம் வேலாயுதம்பாளையத்தில் குடியிருந்து தற்போது ஒண்டிப்புதூர் 60, நாகையன்தோட்டத்தில் வசிக்கும் பொங்கி கவுண்டர்மகன் மாரப்ப கவுண்டர் என்று சொல்லி தான் வா.சா.ஆ.8 வாரிசு சான்றிதழை வாங்கியிருக்கிறோமா என்றால் ஒண்டிப்புதூரில் வசிப்பதாக சொல்லிதான் வாங்கியிருக்கிறோம். வா.சா.ஆ.8 ஆவணத்தை நீதிமன்றத்தில் போய் மனு கொடுத்து வாங்கினோமா என்றால் இல்லை. மணியக்காரரிடம் தான் வாங்கினோம். நான் நீதிமன்றத்திற்கு சென்று வாக்குமூலம் எதுவும் தரவில்லை. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.8 இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்கள் வேலாயுதம்பாளையத்தை சேர்ந்த பெ.மாரப்ப கவுண்டரின் இறப்பு சான்றிதழோ அல்லது வாரிசு சான்றிதழோ இல்லை என்றால் சரியல்ல. பெ.மாரப்ப கவுண்டருக்கு அவருடைய திருமணத்தின் மூலமாக பெண் மக்களே பிறக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் 2 பெண் வாரிசுகள் இருக்கிறோம். நானும் மசாத்தாளும் மாரப்பகவுண்டரின் பெண் வாரிசுகளே அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் மாரப்ப கவுண்டரின் வாரிசுகள் என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ள 1 முதல் 6 வாதிகள் யாரும் மாரப்ப கவுண்டரின் வாரிசுகள் அல்ல என்றால் சரியல்ல. அதனால் தான் எந்த ஒரு ஆவணத்தையோ ஆதாரத்தையோ என்னால் நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியவில்லை என்றால் சரியல்ல. பெ.மாரப்ப கவுண்டர் ஒண்டிப்புதூருக்கு போகவும் இல்லை, அவர்

Sd/-காளியம்மாள்

அங்கு இறக்கவும் இல்லை என்றால் சரியல்ல. யார், யார் எல்லாம் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் என் அத்தை மகன் கிட்டுசாமி மற்றும் நடராஜன் பெயரில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம். வேறு யார் பெயரிலும் போடவில்லை. நடராஜனும், கிட்டுசாமியும் எங்களுக்கு சொந்தம் அல்ல, அவர்கள் எங்களுக்கு அந்நியர் என்று சொல்லியிருக்கிறோம் என்றால் எங்களுக்கு அத்தை பையன்கள். நாங்கள் தாக்கல் செய்த முதல் வழக்குரையிலும், 2 திருத்தப்பட்ட வழக்குரைகளிலும் நடராஜன், கிட்டுச்சாமி என்னுடைய அத்தை பையன்கள் என்று சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறோம். 10, 20 வருடங்களாக என்னால் நடக்க இயலவில்லை என்றால் சரிதான். வழக்கு போடுவதற்கு தகவல் எல்லாம் நான் போய் வழக்கறிஞரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் ஒண்டிப்புதூரில் கைரேகை வைத்தேனா என்றால் இல்லை. திருப்பூரில் வழக்கறிஞர் அலுவலகத்திலும் வழக்குரையில் கைரேகை வைக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்காக நானோ, மசாத்தாளோ எந்த கைரேகையும் வைக்கவில்லை என்றால் சரிதான். நான் திருமணமான தேதியில் இருந்து ஒண்டிப்புதூரில் தான் நிரந்தரமாக இருந்தேன் என்றாலும், வேறு எங்கும் செல்லவில்லை என்றாலும் சரிதான். 1 ம் பிரதிவாதி நடராஜன் இறந்துவிட்டார். அவருடைய இறப்பிற்கு நான் போகவில்லை. 1 முதல் 6 வாதிகள் யாரும் போகவில்லை. வழக்குரையில் என்ன விபரங்கள் உள்ளது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதை யார் சொன்னார்கள், என்ன செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். வழக்குரையை யாரும் என்னிடம் படித்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான். பூமியில் சாளை இருக்கிறதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் சாளை இருக்கிறது என்று போட்டிருக்கிறேன் என்றால் இல்லை. சாளையே இல்லை. வழக்குரையில் கண்ட சொத்து விபரத்தை வா.சா.ஆ.1 பாகக்கறார் பத்திரத்தை பார்த்து எழுதினார்களா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு யார் ஆவணங்கள் கொடுத்தார்கள் என்றால் பையன்கள் தான் கொடுத்திருப்பார்கள். நான் கொடுக்கவில்லை. எனக்கு 80 வயதிற்கு மேலாகிறது என்றால் சரிதான். என் சகோதரிக்கு என்னை விட 2 வயது குறைவு என்றால் சரிதான். பிராதில் என்ன வயது கொடுத்திருக்கிறேன் என்ற விபரம் எனக்கு தெரியாது. வா.சா.1 சுந்தரராஜன், நானும், எனது சகோதரியும் வயதானவர்கள் என்பதால் வீட்டை விட்டு வெளியே வந்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க இயலாது என்று சொல்லியிருக்கிறார்

Sd/-காளியம்மாள்

என்றால் சரிதான். வா.சா.1 சரியாக சாட்சியம் சொல்லாததால் நான் வந்து சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொன்னார் என்றால் அவர் சரியாக தான் சாட்சியம் அளித்தார். தாவா பூமி 78 1/2 செண்ட் விஸ்தீரணம் உள்ளது என்றால் சரிதான். அது 89/3 காலை எண்ணில் உள்ளது என்றால் சரிதான். பிராது தாக்கல் செய்யும்போதே அந்த உட்பிரிவு 89/3 என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு விபரத்தில் தாவாசொத்தின் செக்குபந்திகளை சரியாக சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். இன்னார் பூமிக்கு கிழக்கே, தெற்கே, வடக்கே என்று சொல்லி போட்டிருக்கிறேன். மேற்கே தங்கவேல்சாமி இருக்கிறார். தென்புறம் கோவிந்தசாமி. கிழபுறம் சின்னசாமி, பொன்னம்மாள் இருக்கிறார்கள். அவ்வாறு சொல்லி தான் வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். தாவா பூமியின் பட்டாவை எங்கள் பெயருக்கு மாற்றியிருக்கிறோமா என்றால் இல்லை. மசாத்தாள் பெயரிலோ, என் பெயரிலோ பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். எங்களுக்கு இந்த பூமி பாத்தியம் என்று சொல்லக்கூடிய கந்தாய ரசீதுகள் எதையாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வேலாயுதம்பாளையம் குடித்தெருவில் 2 லக்கமிட்டவர் வீட்டிற்கு வடக்கு 4 லக்கமிட்டவர் வீட்டிற்கு தெற்கு, பாட்டே கவுண்டர் வீட்டிற்கு கிழக்கு, தென்வடல் தடத்திற்கு மேற்கு, இதன் மத்தியில் உள்ள கிழக்கு வாசல் 2 1/3 அங்கண வில்லை வீடு என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான், வீடு இருக்கிறது, சாளை இல்லை. அந்த வீட்டை இடித்து பிரதிவாதிகள் கட்டிடம் கட்டியிருக்கிறார்கள் என்றால் இல்லை. அது தற்போது கலைஞர் வீதி என்று ஆகிவிட்டது என்றால் இல்லை. தாவா சொத்தில் எனக்கு எந்த வித உரிமையோ, சுவாதீனமோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. பொய்யான தாவா தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் அப்பா என்று சொல்லி கொள்ளும் மாரப்ப கவுண்டர் இறக்கும்போது அவருக்கு 80 வயதிருக்கும் என்றால் சரிதான். மாரப்ப கவுண்டர் இறக்கும்போது வேலாயுதம்பாளையத்தில் தான் இருந்தார் என்றால் ஒண்டிப்புதூரில் தான் இருந்தார். 10.1.1977 ல் கருப்பணக் கவுண்டர் மகன் மாரப்ப கவுண்டருக்கு பொங்கியா கவுண்டர் மகன் மாரப்ப கவுண்டர் ரூ.90 க்கு கிரயம் கொடுத்து விட்டார் என்றால் விற்கவே இல்லை. அவ்வாறு விற்பனை செய்தபின் கருப்ப கவுண்டர் மகன் மாரப்ப கவுண்டர் தான் சுவாதீனத்தில் இருந்து தற்போது அவரின் வாரிசுகள் தாவாசொத்தில் சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எங்களுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும், பிரதிவாதிகளின் எதிரிகள் தூண்டிவிட்டு, எங்களை பொய் வழக்கு

Sd/-காளியம்மாள்

போட செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. கருப்ப கவுண்டர் மகன் மாரப்ப கவுண்டர் 1977 ல் இருந்து இறக்கும் வரை தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து அதன் பின்பு அவரது வாரிசுகள் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றாலும் பட்டா சிட்டா அனைத்தும் அவரின் வாரிசுகள் பெயருக்கு மாறிவிட்டது என்றாலும் சரியல்ல. தாவா பூமிக்கு நான் எந்த காலத்திலும் கந்தாயம் கட்டவில்லை என்றால் சரியல்ல. என் மகன் கட்டி வருகிறான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/-காளியம்மாள்

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-S.Indulatha,12.10.2018
மாவட்ட உரிமையியல் நீதிபதி
பல்லடம்